05.03.2024



**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், துறையூர்.</u>**

**EA.No.02/2020 in EP.No.10/2019 in OS.No.3555/1979.**

**ம.சா. 3–தங்கவேல், த/பெ. நடராஜன்**

**1ம் எதிர்மனுதாரர்/மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

எனக்கு பூர்வீகம், பெரம்பலூர் மாவட்டம், நெர்குணம் காட்டுக்கோட்டாய் என்றால் சரிதான். மனு சொத்து குறித்து இந்த நீதிமன்றத்தில் வழக்கு நடந்த விவரம் உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியும். 2009ல் வழக்கு நடந்தது, வழக்கு எண் எனக்கு ஞாபகமில்லை. யார் யாருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்தார்கள் என்ற நபர்களின் பெயர் தெரியுமா என்றால் பெயர் எனக்கு தெரியாது. யாருக்கு அந்த வழக்கு சாதகமாக தீர்ப்பு ஏற்பட்ட விவரம் தெரியுமா என்றால் வழக்கு தாக்கல் செய்தவருக்கு தான் சாதகமாக தீர்ப்பு ஏற்பட்டது. அதில் பாதிக்கப்பட்ட தரப்பினர் மேல்முறையீடு தாக்கல் செய்தாரா என்றால் ஆமாம். மேல்முறையீடு தாக்கல் செய்தவருக்கு சாதமாக ஆகவில்லை. இரண்டாவது மேல்முறையீடு தாக்கல் செய்தார்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

02. இந்த மனுவில் மனுதாரர் ஜோதி என் உடன் பிறந்த சகோதரி. துறையூர், சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு 478/1993 வழக்கை யார் யாருக்கு எதிராக தாக்கல்

05.03.2024



செய்த விவரமும் எனக்கு தெரியாது. மனுதாரர் உங்களுடைய சகோதரி என்பதால் உண்மை விவரம் எதுவும் தெரியாமல், பெரம்பலூரில் வசிக்கின்ற நீங்கள் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

/உண்மை நகல்/
ஒம்/-திரு.இரா. சத்தியமூர்த்தி,
மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
துறையூர்.